மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே,

" தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நிதி ஒதுக்க (3-ம் எண்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 41/72) சட்டமாக்கப்பட வேண்டும் " என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக்கப்பட்டது.

(6) அறிவிப்புகள்

(அ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு உழவுத் தொழிலாளர் நியாயக் கூலி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/72)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1972-ம் ஆண்டு உழவுத் தொழிலாளர் நியாயக் கூலி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/72) பேரவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(5) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு உழவுத் தொழிலாளர் நியாயக் கூலி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/72.)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, " தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு உழவுத் தொழிலாளர் நியாய ஊதியவகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு * (சட்டப் பேரவைச் சட்ட வரைவு எண் 34/1972) ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் " என்று நான் முன் மொழிகிறேன்.

கீழ்த் தஞ்சாவூரில் உழவுத் தொழிலாளரின் பிரச்சினைகள் குறித்து விசாரணை செய்வதற்கென, 1968 டிசம்பரில் மாநில

---

* 12—8—1972 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.